தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 9, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 ஆகஸ்ட் 25, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

என் குடியை உயரச் செய்வேன் என்று முயலும் ஒருவருக்கு ஊழ், ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு தானே முன்வந்து துணை செய்யும்.

1. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 11, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

11–

மின் கம்பங்கள்

***1044–திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 18–வது வார்டில் உள்ள அண்ணா நகர் – ஜவஹர் நகர் பகுதியில் பழுதடைந்துள்ள தெருவிளக்கு மின் கம்பங்களை மாற்றி புதிய கம்பங்கள் அமைக்க அரசு முன்வருமா?

[2001 ஆகஸ்ட் 25

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மின் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சியில் 18-வது வார்டில் உள்ள அண்ணா நகர்-ஜவஹர் நகர் பகுதியில் பழுதடைந்துள்ள தெருவிளக்கு மின் கம்பங்களை மாற்றி புதிய மின் கம்பங்கள் அமைக்கும் பணி இன்று முதல் தொடங்கப்படும்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 18-வது Division-ல் உள்ள அண்ணா நகர் – ஜவஹர் நகர் பகுதியில் இருக்கும் பழுதடைந்த மின் கம்பங்களைப் பற்றி 4-12-2000 அன்று நான் தலைமைப் பொறியாளர் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்கள் உடனே மதிப்பீடு தயார் செய்து அனுப்பியும்கூட இந்தப் பணி நடைபெறுவதற்கு ஏறத்தாழ 8 மாதம் ஆகியிருக்கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இந்தப் பணி செய்வதற்கு முதலிலே மாநகராட்சி மறுத்துவிட்டது. மாநகராட்சி நாங்கள் இதற்குப் பணம் செலவழிக்க முடியாது என்று சொல்லிவிட்டது. அதற்குப் பின்பு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து 19 ஆயிரம் ரூபாய் அதற்கு ஒதுக்கியும்கூட, அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படவில்லை. காலம் தாழ்த்திய காரணத்தினாலே அதை மறுமதிப்பீடு செய்து 20 ஆயிரம் ரூபாய் என்று முதன்மைப் பொறியாளர் தெரிவித்தார். அப்படித் தெரிவித்த பின்னாலும், 20 ஆயிரம் ரூபாய் கொடுத்துவிடலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதி, ஏறத்தாழ நான்கு மாத காலம் ஆகியும்கூட அந்தப் பணி உடனடியாகத் தொடங்கப்படவில்லை. ஆனால், அமைச்சர் அவர்கள் இன்று தொடங்குவதாக அறிவித்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 4-12-2000 அன்றைக்கே நான் இதைத் தெரிவித்தேன், நடவடிக்கை எதுவும் இல்லையென்று சொன்னார்கள். 4-12-2000 அன்று யாருடைய ஆட்சி இருந்தது என்று உங்களுக்குத் தெரியும். இதுவும் ஒரு உதாரணம் அந்த ஆட்சி எந்த அளவிற்கு மெத்தனமாக இருந்தது என்பதற்கு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எங்களைப் பொறுத்தவரை, அதாவது பேரூராட்சி, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி இந்தப் பகுதிகளுக்குட்பட்ட மின் கம்பங்களை

2001 ஆகஸ்ட் 25]

மாற்றி அமைக்க வேண்டுமென்றால், அந்த மின் கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்பதற்குரிய கருத்துரு மின்சார வாரியத்தால் பெறப்பட்டு, அந்தப் பணம் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டு, deposit work-ஆக எடுக்கின்ற பட்சத்தில் அது செய்யப்படும். எனவே, 20 ஆயிரம் ரூபாய் நம்முடைய எம்.எல்.ஏ நிதியிலிருந்து எங்களுக்கு வராததால் இந்தப் பணி தாமதமாகியது. எனவே, இப்போது இந்தப் பணி தொடங்கப்படும்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு liaison agency-ஆக மாநகராட்சியை நியமித்திருக்கின்ற காரணத்தினாலே நேரடியாக மின்சார வாரியம் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து பணத்தைப் பெற முடியவில்லை. எது செய்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் மாநகராட்சிக்குச் சொல்லி, மாநகராட்சிதான் அவர்களுக்கு காசோலை அனுப்ப வேண்டியிருக்கிறதேயொழிய, நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மின்சார வாரியத்திற்கு காசோலை அனுப்ப முடியாத ஒரு சூழ்நிலை இருந்த காரணத்தினாலே இது இவ்வளவு காலதாமதம் ஆகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, நேரடியாக காசோலை அனுப்புவதற்கு இனிமேலாவது வகை செய்யப்படும் என்று சொன்னால், இதுபோன்ற காலதாமதத்தைத் தவிர்க்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதம் ஏன் ஆகிறது என்ற கருத்தைச் சொல்லும்போது, அதிலே கோயம்புத்தூர் மாநகராட்சி ஒரு Nodal Agency ஆக இருக்கின்ற காரணத்தினால் பணம் மின்சார வாரியம் பெறுவதிலே சிரமம் இருப்பதாகச் சொன்னார்கள். எனவே, எதிர்காலத்திலே இதுபோன்ற சிக்கல்கள் இருக்காத வண்ணம் அரசு அவருடைய கருத்தை ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.